**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.77/2025**
**PW4**

| | | |
|---|---|---|
| **Name** | : | குமார் |
| **Father's Name** | : | சுப்பிரமணி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.02.2026.
A1 to 5 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2019 அன்று திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது பகல் 13.00 மணியளவில் உதவி ஆய்வாளர் முரளிதரன் தலைமையில் நானும், தலைமைக்காவலர் கோபி , தலைமைக்காவலர் மஞ்சுநாதன் ஆகியோர் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக வேலூர் - திருக்கோவிலூர் புறவழிச்சாலையில் ரோந்து பணியில் இருந்தபோது எடப்பாளையம் ரிங்ரோடு அருகே இருந்த ஏழுமலை டீ கடையின் அருகே சென்றபோது டீக்கடை பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் கையில் கத்திகளுடன் 5 நபர்கள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் உட்கார்ந்திருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் இரண்டு நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். அங்கிருந்த மூவரை பிடித்து விசாரித்தபோது அவர்களில் அண்ணாமலை, ஈஸ்வர், கோகுல்சரத் என்று தெரிவித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 1 முதல் 3 தான் அவர்கள். அங்கிருந்து தப்பிஓடிய நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 4 ,5 பாபுலால் மற்றும் ஆபாவானன். எதிரிகள் 1 முதல்

3வரை உள்ளவர்களை விசாரித்தபோது ஜாலியாக செலவு செய்ய பணம் இல்லாததால் அந்த பக்கமாக செல்லும் வழிப்போக்கர்களை மடக்கி வழிப்பறி செய்து அவரிடம் இருந்து பணம் பறிக்க திட்டம் தீட்டிக்கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். பின்னர் அவர்களிடம் இருந்த சிறிய கத்தி 3 மற்றும் TN25M2778 என்ற சிகப்பு நிற இருசக்கர வாகனத்தையும் படிவம் 95 மூலம் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு வந்து உதவி ஆய்வாளர் அறிக்கை ஒன்று கொடுத்தார். ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை சுப்பிரமணி என்ற ஆய்வாளர் விசாரித்தார். நான் ரோந்து பணிக்கு தனியாக செல்லவில்லை. எல்லாரும் ஒரே சுமோ வண்டியில்தான் சென்றோம். என் மேலதிகாரியின் உத்தரவின்பேரில்தான் ரோந்து பணிக்கு சென்றோம். நான்சொல்வதுபோல் அந்த தேதியில் நாங்கள் எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருந்தால் அங்கிருந்த எதிரிகள் 5 பேரும் ஓடியிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியால் என் மேல் அதிகாரியின் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.